சுற்றுநிருபம் : **19/2010**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வட மாகாணம்
20.07.2010

வட மாகாணத்திலுள்ள
சகல கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கும்

**ஆணைக்குழுச் சுற்று நிருபங்களை**
**கூட்டுறவுப் பணியாளர்களிடையே சுற்றிப்பரப்புதல்**

ஆணைக்குழுவால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் தொடர்பாக கூட்டுறவுப் பணியாளர்கள் அனைவரும் அறிந்திருக்கச் செய்யவேண்டியது அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களினதும் கடமையாகும். ஆணைக்குழுவால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெரும்பாலான பணியாளர்கள் மத்தியில் கூட்டுறவுச் சங்கங்களால் காண்பிக்கப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் காரணமாக பணியாளர்கள் தமக்குரிய பல்வேறு நலன்களை, நிவாரணங்களை இழக்க வேண்டி வருவதுடன் அவர்களால் காலம் பிந்திய முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு வருவதனையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எனவே ஆணைக்குழுவால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் தொடர்பில் பின்வரும் நடைமுறைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

1. சுற்றுநிருபங்களை அனைத்துப் பணியாளர்களுக்கும் காண்பித்து அதனை அவர்கள் பார்வையிட்டதன் அடையாளமாக அவர்களின் முதலெழுத்தொப்பம் பெறப்படல் வேண்டும்.

2. ஆணைக்குழுவால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் தங்களின் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

3. பணியாளர்கள் விரும்புமிடத்து புகைப்பட பிரதிபண்ணும் செலவை சங்கத்திற்கு மீளளித்து அதனைப் பிரதி பண்ணும் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

2010.07.15ம் திகதிய ஆணைக்குழுப் பணிப்பின்படி,

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி :
01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.
03. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்